**நகர மன்றம், உளுந்தூர்பேட்டை** **நாள். 29.05.2023**

# அறிவிப்பு

உளுந்தூர்பேட்டை நகரமன்ற சாதாரணக் கூட்டம் 29.05.2023ம் தேதி திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நகரமன்ற தலைவர் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகரமன்ற கூடத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்திற்கு தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**முன்னிலை - திரு. கே. திருநாவுக்கரசு அவர்கள்,**

**நகர மன்ற தலைவர்**

## கூட்ட நிரல்

| வ.எண் | பொருள்கள் மே 2023 சாதாரணக் கூட்டம் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் முத்தமிழ் கலைஞர் கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவினை சிறப்பிக்கும் பொருட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்தும், நாளிதழ்களில் நகராட்சி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாளை சிறப்பிக்கும் பொருட்டு விளம்பரம் செய்யவும், இனிப்புகள் மற்றும் நலத்திட்டங்கள் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு<br><br>**அலுவலக குறிப்பு**-மன்றம் அனுமதிக்கலாம் | 77 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 2 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பாதாள சாக்கடை திட்டப்பணி ரூ.38.67 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு, 15.02.2023 முதல் ஒப்பந்ததாரருக்கு சோதனை ஓட்டம் மேற்கொள்ள 6 மாதங்களுக்கு அனுமதியளித்துள்ளது. | 78 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CamScanner

மேற்கண்ட பாதாள சாக்கடை திட்டத்திற்கான வீடு / வணிக கட்டட இணைப்புகள் 6450 எண்ணிக்கையினை உளுந்தூர்பேட்டை நகராட்சியால் வழங்கப்பட வேண்டும்.

மேற்கண்ட திட்டத்திற்கான பாதாள சாக்கடை வீடு / வணிக கட்டட இணைப்புகள் 6450 எண்ணிக்கை உடனடியாக வழங்கும் பொருட்டும், பொதுமக்களின் சிரமங்களை குறைக்கும் நோக்கிலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை- 28 அவர்களின் கடித. ந.க.எண். 15713/2022/EA1 நாள்.20.02.2023-ல் மாநில நகர்ப்புற உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி 2023-24 (SUIDF) கடன் திட்டத்தில் TUFIDCO நிறுவனத்திலிருந்து 5% வட்டியுடன் (5% P.A for Ten Years) 7.15 கோடி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நகராட்சி பகுதிகளில் உள்ள வீடு / வணிக கட்டடங்களுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் 6450 எண்ணிக்கைகள் வழங்குவதற்கு ரூ. 6.95 இலட்சங்களுக்கு தொழில் நுட்ப அனுமதி Roc.No. 001/2022/DO1 Dt: 07.03.2023-ல் தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் வழங்கப்பட்டு இந்நகராட்சி மூலம் ஒப்பந்தபுள்ளி 06.03.2023-ல் பெறப்பட்டு, M/s. மான்சி பில்டர்ஸ், கர்நத்தம் அவர்களுக்கு ந.க.எண். 180/2022/இ1, நாள். 02.05.2023 அன்று ஆணையர், உளுந்தூர்பேட்டை நகராட்சி அவர்கள் மூலம் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பணியில் பாதாள சாக்கடை இணைப்புகள் 0 மீட்டர் முதல் 6 மீட்டர் (தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய ஒப்பந்ததாரர் ஆள் இறங்கும் குழியில் (Manhole) இருந்து சாலை ஓரம் வரை பதிக்கப்பட்டுள்ள குழாயில் இருந்து 6 மீட்டர் தூரம் வரை) தூரம் வரை போடுவதற்கும் மற்றும் இதர பணிகளுக்கும் ஒரு இணைப்பிற்கான (Internal Plumbing) கட்டணம் ரூ. 10780.00 ஆகும்.

மேற்கண்ட பணியில் 6 மீட்டருக்கு மேல் வரும் பணிகளை வீடு / வணிக கட்டட உரிமையாளர் தனது சொந்த செலவில் ஆட்கள் மற்றும் பொருட்கள் ஆகியவற்றின் மூலம் நகராட்சி பணியாளர்களின் மேற்பார்வையில் அவராகவே செய்து கொள்ள வேண்டும்.

மேலும், பாதாள சாக்கடை இணைப்புகளுக்கான வைப்பு தொகை மற்றும் சேவை கட்டணம் கட்டட உரிமையாளரிடம் வசூலிக்க பாதாள சாக்கடை உபவிதிகள் விழுப்புரம் மாவட்ட அரசிதழில் ஜீன் 16, 2019 அன்று மாவட்ட ஆட்சியரின் ஆணையின்படி வெளியிடப்பட்டதன் விவரம் அட்டவணை – 1ன்படி, பின்வருமாறு

CS CamScanner

**<u>பாதாள சாக்கடை வீடு / வணிக இணைப்பு வைப்பு கட்டணம் / சேவை கட்டணம் விவரங்கள்</u>**

**அட்டவணை-1**

| வ. எண் | கட்டடத்தின் சதுர அடி | வைப்புத் தொகை ரூ. | | மாதம் ஒன்றுக்கான சேவைக் கட்டணம் | |
|---|---|---|---|---|---|
| | | வீட்டு உபயோகம் | வணிக உபயோகம் | வீட்டு உபயோகம் | வணிக உபயோகம் |
| 1. | 500 சதுர அடி வரை | 3000.00 | 6000.00 | 50.00 | 100.00 |
| 2. | 501 முதல் 1200 சதுர அடி வரை | 5000.00 | 10000.00 | 70.00 | 140.00 |
| 3. | 1201 முதல் 2400 சதுர அடி வரை | 7000.00 | 14000.00 | 90.00 | 180.00 |
| 4. | 2400 சதுர அடிக்கு மேல் | 10000.00 | 20000.00 | 110.00 | 220.00 |

மேலும், வீடு / வணிக கட்டட உரிமையாளர்கள் பாதாள சாக்கடை இணைப்பு பெறும்போது, நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய விண்ணப்ப கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணம் அட்டவணை-2ன்படி பின்வருமாறு

**<u>பாதாள சாக்கடை வீடு / வணிக கட்டட இணைப்பு விண்ணப்பம் / மேற்பார்வை கட்டண விவரம்</u>**

**அட்டவணை-2**

| வ. எண் | குழாய் நீளம் | விண்ணப்ப கட்டணம் | மேற்பார்வை கட்டணம் | | |
|---|---|---|---|---|---|
| | | | மண் சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
| 1 | 0 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை | 50.00 | 1000.00 | 1040.00 | 1060.00 |

மேலும், வீடு / வணிக கட்டட உரிமையாளர்கள் 0 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை நகராட்சி ஒப்பந்ததாரர்

CamScanner

| | | | |
|---|---|---|---|
| | மூலம் செய்யப்படும் பணிகளுக்கு (Internal Plumbing) நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் அட்டவணை-3ன்படி பின்வருமாறு<br><br>**<u>பாதாள சாக்கடை வீடு / வணிக இணைப்பு 0 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை செய்யப்படும் பணிகளுக்காக நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டண விவரம்.</u>**<br><br>**அட்டவணை-3**<br><br><table><tr><th>வ. எண்</th><th>குழாய்களின் நீளம்</th><th>வீடு/ வணிக கட்டட உரிமையாளர் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய கட்டணம்</th></tr><tr><td>1</td><td>0 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை</td><td>10780.00</td></tr></table><br>மேற்கண்ட அட்டவணை-1, அட்டவணை-2 மற்றும் அட்டவணை – 3 ஆகியவற்றில் உள்ள விவரங்களின்படி 0 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை பாதாள சாக்கடை வீடு / வணிக கட்டட இணைப்புகளுக்கு, நகராட்சியில் விண்ணப்பம் அளித்து கட்ட உரிமையாளர் பாதாள சாக்கடை இணைப்புகளை பெற்றுக்கொண்டு 10 தவணைகளாக தொகையினை செலுத்தவும், 6 மீட்டருக்கு மேல் வரும் பணிகளை கட்டட உரிமையாளர் தனது சொந்த செலவில் ஆட்கள் மற்றும் பொருட்களை வைத்து நகராட்சி பணியாளர்களின் மேற்பார்வையில் அவராகவே செய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும், மேற்கண்ட பணிக்கு முன்னர் வைக்கப்பட்டுள்ள மன்ற பொருள் எண். 115, நாள். 30.06.2022-ஐ ரத்து செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம். | | |

CamScanner

<table>
<tr><td></td><td>2. வீடு / வணிக கட்டட உரிமையாளர் உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு அட்டவணை - 1, அட்டவணை - 2 மற்றும் அட்டவணை -3ல் உள்ள தொகைகளை 0 மீட்டர் முதல் 6 மீட்டர் வரையுள்ள பாதாள சாக்கடை வீடு / வணிக இணைப்புகளை பெற நகராட்சி அலுவலகத்தில் விண்ணப்பம் அளித்து இணைப்புகள் பெற்றுக் கொண்டு நகராட்சியில் 10 தவணைகளாக தொகை செலுத்தவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. 6 மீட்டருக்கு மேல் வரும் பாதாள சாக்கடை வீடு / வணிக இணைப்புகளை கட்டட உரிமையாளர் தனது சொந்த செலவில் நகராட்சி பணியாளர்களின் மேற்பார்வையில் ஆட்கள் மற்றும் பொருட்களை வைத்து அவராகவே செய்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>4. வீடு / வணிக கட்டட உரிமையாளர்கள் 0 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை நகராட்சி ஒப்பந்ததாரர் செய்யும் பாதாள சாக்கடை வீடு / வணிக கட்டட இணைப்புகளுக்கு எவ்விதமான தொகையும் ஒப்பந்ததாரருக்கு வழங்க கூடாது என்பதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>5. மேற்கண்ட பணிக்கு முன் வைக்கப்பட்டுள்ள மன்றபொருள் எண். 115 நாள். 30.06.2022-ஐ ரத்து செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td><td></td></tr>
<tr><td>3</td><td>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/ எம்-1, நாள். 10.03.2023-ல் நகராட்சி பகுதியில் உள்ள அரசு தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் வகுப்பு 1 முதல் 5 வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட தெரிவிக்கப்பபட்டுள்ளது. அதனடிப்படையில் நகராட்சி பகுதியில் உள்ள அரசு தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் வகுப் 1 முதல் 5 வரை 3 பள்ளிகளில் பயிலும் 322 மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்திட ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைப்பதற்கு 06.04.2023- அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி</th></tr>
</table></td><td>79</td><td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

CamScanner

| எண் | | தொகை | | விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வகுப்பு 1 முதல் 5 ஆம் வரை அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முதல்வரின் காலை சிற்றுண்டி வழங்குவதற்கு பண்ருட்டி பிரதான சாலையில் அமைந்துள்ள அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி (பழைய பள்ளி) வளாகத்தில் ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைத்தல் | ரூ. 12.00 இலட்சம் | S.P. CONSTRUCTION, ULUNDURPET | 0.01% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | MAANSI BUILDERS KARNATHAM | 4.11% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

மேலும் இத்திட்டம் தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு திட்டமான நகராட்சி பகுதியில் உள்ள அரசு தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் வகுப்பு 1 முதல் 5 வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கான அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து செயல்படுத்திட வேண்டியுள்ளதால் 10.04.2023ம் தேதிக்குள் இப்பணிக்கு பணி உத்தரவு வழங்கிடவும், 15.05.2023ம் தேதிக்குள் ஒருங்கிணைந்த சமையற்கூட கட்டடம் கட்டி முடிக்கபட வேண்டும் எனவும் கால அளவு நிர்ணையம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் மேற்காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே திட்டப்பணியின் அவசர

CS CamScanner

அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்ததாரர் "S.P. CONSTRUCTION, ULUNDURPET " என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு திட்டமான நகராட்சி பகுதியில் உள்ள அரசு தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலை பள்ளிகளில் வகுப்பு 1 முதல் 5 வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கான அனைத்து பணிகளையும் விரைந்து முடித்து செயல்படுத்திட கால அளவு நிர்ணையம் செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/ எம்-1, நாள். 10.03.2023-ல் தெரிவிக்கப்பட்டுள்ளதன் படி இத்திட்டப் பணிக்கு ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைப்பதற்கு பணி உத்தரவு 10.04.2023-ம் தேதிக்குள் வழங்கவும், 15.05.2023ம் தேதிக்குள் ஒருங்கிணைந்த சமையற்கூட கட்டடம் கட்டி முடிக்கபட வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளார், எனவே திட்டப்பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட "0.02%" குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் S.P. CONSTRUCTION, ULUNDURPET என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி திட்டத்திற்கான பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

4 **பொருள் எண்.04**

உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வகுப்பு 1 முதல் 5 ஆம் வரை அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முதல்வரின் காலை சிற்றுண்டி வழங்குவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மன்றத்தின்பார்வைக்கு வைத்தல்

| வ. எண் | வேலையின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வகுப்பு 1 முதல் 5 ஆம் வரை அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு முதல்வரின் காலை சிற்றுண்டி வழங்குவதற்கு | பிரசன்னபவன் உணவகம் | 0.01% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | வசந்தபவன் உணவகம் | 2.11% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள பிரசன்னபவன் உணவகம் என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்படி தொகையினை திட்ட நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

CamScanner

<table>
<tr>
<td>5</td>
<td>உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு சொந்தமான டிவிஎன் ரோடு தரைதள கடை எண்.5 குத்தகை வரிசை எண்.176/42 கோ. பட்டுசாமி பெயர் ஏலம் எடுத்து நடத்தி வந்த நிலையில் 11.08.2018-ல் இறந்துவிட்டார். எனவே மேற்படி கடையினை அவரது மகன் திரு. ப. கிருஷ்ணமூர்த்தி தனது பெயருக்கு பெயர் மாற்ற செய்து தரக் கோரிய கடிதம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:-</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. நகராட்சி சட்ட விதிகளுக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்</td>
<td>81</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>6</td>
<td>உளுந்தூர்பேட்டை நகராட்சியில் பொது சுகாதாரத்திற்கு பயன்படுத்தப்படும் இரண்டு மினி லாரி மற்றும் இரண்டு டாட்டா ஏஸ் ஆகிய பொதுசுகாதார வாகனங்களுக்கு அவசர அவசியம் கருதி காப்பீடு புதுப்பிக்க தொகை கீழ்க்கண்டவாறு காப்பீடு நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டமைக்கு பின்னேற்பு மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது..
<table>
<tr><th>வ.எண்.</th><th>வாகன எண்</th><th>காப்பீடு தொகை</th></tr>
<tr><td>1,</td><td>TN 15 7902 (மினிலாரி)</td><td>31839</td></tr>
<tr><td>2,</td><td>TN 15 8303 (மினிலாரி)</td><td>31839</td></tr>
<tr><td>3,</td><td>TN 15C – 4359 (டாட்டா ஏஸ்)</td><td>22640</td></tr>
<tr><td>4,</td><td>TN 15 –3804 (டாட்டா ஏஸ்)</td><td>22640</td></tr>
</table>
</td>
<td>82</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| | <table><tr><td>மொத்தம்</td><td>108958</td></tr></table> எனவே மேற்படி தொகையை காப்பீடு நிறுவனமாக M/S United India Insurance Company Ltd என்ற நிறுவனத்திற்கு காசோலையாக மூலம் தொகை செலுத்தியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி காப்பீடு புதுப்பித்தல் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 7 | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு தேவையான எழுதுபொருட்கள், பதிவேடுகள் மற்றும் இதர உபகரணங்கள் 2023-2024ம் ஆண்டிற்கு கொள்முதல் செய்திட தோராய செலவிம் ரூ.500000/- மன்றத்தின் அனுமதிக்க வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | 83 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 8 | உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் ஏற்படும் பைப்லைன் பழுதுகளை சரிசெய்திட தோராய செலவினம் ரூ.990000/-க்கு நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-** | 84 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CamScanner

<table>
<tr><td></td><td>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்</td><td></td><td></td></tr>
<tr><td>9</td><td>ன் கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 17.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 24 வார்டு பகுதிகளிலும் அவ்வப்போது ஏற்படும் பைப்லைன் பழுதுகளை சரி செய்தல்</td><td rowspan="2">9.90</td><td>M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம்</td><td rowspan="2">(-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம்</td></tr>
<tr><td>.M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை</td></tr>
<tr><td>2</td><td>உளுந்தூர்பேட்டை நகராட்சி வார்டு எண். 01 ல்</td><td></td><td>திரு. எஸ். அருள் , சிறுபாக்கம்,</td><td>(-)0.01% குறைந்த விலைப்புள்ளி</td></tr>
</table></td><td>85</td><td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

CS CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ள பாரிவள்ளல் தெரு உடையார் மண்டபம் பின்புறம் மற்றும் சுமங்கலி மண்டபம் முதல் தெரு இரண்டாவது தெருவில் புதியதாக குடிநீர் பைப்லைன் விஸ்தரிப்பு பணிக்கு | 4.60 | உளுந்தூர்பேட்டை<br>. M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை | வழங்கியவர் M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் |
| 3 | உளுந்தூர்பேட்டை நகராட்சி வார்டு எண். 02 ல் உள்ள கார்த்திகேயன் நகர் விரிவாக்கம் பகுதியில் புதியதாக குடிநீர் பைப்லைன் விஸ்தரிப்பு பணிக்கு | 3.10 | திரு. எஸ். அருள் , சிறுபாக்கம், உளுந்தூர்பேட்டை<br>. M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் |

**அலுவலக குறிப்பு –**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் என்பவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 10 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் 15வது நிதிக்குழு மான்யம் Un Tied Grant 2022-2023 | 86 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

-ன் கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 12.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பாரிவள்ளல் தெரு (Unicode: 176001R008) சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணி (வார்டு எண்.01அமைத்தல் | 7,75 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| | | | M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் | |
| 2 | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பாரிவள்ளர் தெரு முதல் தெரு (Unicode: 176001R010) சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணி (வார்டு எண்,01) | 5.55 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| | | | M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் | |
| 3 | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட சின்னையா தெரு 2வது தெரு (Unicode: 176012R204) சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணி (வார்டு எண்,12) | 8.70 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| | | | M/s. அருள் | |

CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் | |
| 4. | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட பாரதியார் தெரு (Unicode: 176012R196) சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணி (வார்டு எண்,12) | 3.50 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை<br>M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |
| 5. | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட உளுந்தூர் காலனி (Unicode: 176005R098) சிமெண்ட் சாலை சீரமைக்கும் பணி (வார்டு எண்,05) | 5.50 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை<br>M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் |

**அலுவலக குறிப்பு –**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த **குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை** என்பவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 11 | உளுந்தூர்பேட்டை சிறப்புநிலை பேரூராட்சியில் கணினி இயக்குபவராக பணிபுரிந்து தொடர்ந்து நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் கணினி இயக்குபவராக பணிபுரியும் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 12/3737/2020 நாள். 04.08.2021ன்படி நாள் ஒன்றுக்கு ரூ.813/- நிர்ணயிக்கப்பட்டது அக்டோபர் /2022 முதல் ஏப்ரல்/2023 | 87 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CamScanner

முடிய கீழ்க்கண்ட விவரப்படி ஊதியம் வழங்கியதை மன்றத்தின் பின்னேற்பிற்கு வைக்கப்படுகிறது. தொடர்ந்து கனினி தொடர்பான பணிகளை மேற்கொள்ள ஒரு நபரை ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் பணி வழங்கி பொதுநிதியில் செலவினம் மன்றத்தின் அனுமதிக்கு

| மாதம் | கணினி இயக்குபவரின் ஊதியம் |
|---|---|
| அக்டோபர் /2022 | 23577 |
| நவம்பர் 2022 | 22764 |
| டிசம்பர்/2022 | 23577 |
| ஜனவரி /2023 | 23577 |
| பிப்ரவரி/2023 | 21138 |
| மார்ச்/2023 | 23577 |
| ஏப்ரரல்/2023 | 22764 |
| **மொத்தம்** | **160974** |

**அலுவலக குறிப்பு –**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மாவட்ட ஆட்சியர் அவர்களின் ந.க.எண்.12/3737/2020நாள். 04.08.2021 குறைவாகவே ஊதியம்

<table>
<tr><td></td><td>நிர்ணயிக்கப்பட்டு ஊதியம் வழங்கப்பட்டு உள்ளது . மன்றம் பின்னேற்பு வழங்கலாம்.</td><td></td><td></td></tr>
<tr><td>12</td><td>உளுந்தூர்பேட்டை நகராட்சியில், வருவாய் நிதி (General Fund)-ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 33553/2022/EA2-SWM-22, நாள். 10.01.2023ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண். 001/2022/DO1, நாள். 04.02.2023ல் ஒப்பந்தப்புள்ளி தெளிவுரை பெறப்பட்டு, அதனடிப்படையில், 27.04.2023 அன்று மின்னனு (E-Tendering) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில், மின்னனு முறையில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விகிதம்</th></tr>
<tr><td rowspan="3">1</td><td rowspan="3">உளுந்தூர்பேட்டை நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு சேவை வழங்குநர் / முகவர் / ஒப்பந்ததாரர் தேர்வு செய்திட வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) மூலம் பணிகள் மேற்கொள்ளுதல்</td><td rowspan="3">ரூ. 2,04,14,000</td><td>M/s. OUR LAND ENGINEERING WORKS PVT LTD., No. 70/1, Anjugam Nagar, 3rd Street, Jafferkhanpet, Chennai-600083</td><td>ரூ. 4857.00 / ஒரு டன் (-) 0.002% மதிப்பீட்டிற்கும் குறைவு</td></tr>
<tr><td>M/s. GREEN AGRO ENVIRONMENT SERVICES, No. 6, Endataur Road, 66, Thandalam, Madurantagam, Kancheepuram-603306</td><td>ரூ. 4890.00 / ஒரு டன் (+) 0.678% மதிப்பீட்டிற்கும் அதிகம்</td></tr>
<tr><td>M/s. SRINIVAS WASTE</td><td>ரூ. 5057.00 / ஒரு டன்</td></tr>
</table></td><td>88</td><td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

CamScanner

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td></td><td>MANAGEMENT SERVICES PRIVATE LIMITED, F3, Harmony Enclare, No. 8, M.P. Avenue, Abu Sali Street, Saligramam, Chennai-93</td><td>(+) 4.116% மதிப்பீட்டிற்கும் அதிகம்</td></tr>
</table>
மேற்காணும் பணிக்கு மதிப்பீட்டு விலையினைவிட (-) 0.002% குறைவான விலை விகிதம் அளித்துள்ள M/s. OUR LAND ENGINEERING WORKS PVT LTD., Chennai என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.
<u>அலுவலக குறிப்பு</u>:-
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மதிப்பீட்டைவிட (-) 0.002% (ரூ. 4857.00 / ஒரு டன்)-க்கு குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள, M/s. OUR LAND ENGINEERING WORKS PVT LTD., Chennai என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்கண்ட பணிக்கு பட்டியல்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>13</td>
<td>உளுந்தூர்பேட்டை நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022-2023 -ன் கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 05.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.</td>
<td>89</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளி விலை</th></tr>
<tr><td rowspan="2">1</td><td rowspan="2">அண்ணாநகர் பகுதியில் நியாயவிலை கடை கட்டிடம் அமைத்தல்</td><td rowspan="2">15.00</td><td>M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை</td><td rowspan="2">(-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை</td></tr>
<tr><td>M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம்</td></tr>
<tr><td rowspan="2">2</td><td rowspan="2">தமிழ்நாடு உணவகம் பின்புறம் பு.கிள்ளனூர் ஏரி வாய்க்கலில் சிறுபாலம் அமைத்தல் (வார்டு எண்.16).</td><td rowspan="2">9.50</td><td>M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை</td><td rowspan="2">(-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை</td></tr>
<tr><td>M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம்</td></tr>
</table>
அலுவலக குறிப்பு –
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்</li>
<li>மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த மற்றும் M/s. S.P.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை என்பவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்</li>
</ol>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>14</td>
<td>உளுந்தூர்பேட்டை நகராட்சியில் பொது சுகாதார பொருள்கள் போதுமான அளவு கையிருப்பு இல்லாததால், பொது சுகாதார பணிகளான கொசு ஒழிப்பு (டெங்கு), மலேரியா காய்ச்சல் மற்றும்</td>
<td>90</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

CamScanner

<table>
<tr>
<td></td>
<td>
கொரோனா போன்ற தொற்று நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி பணிகளை மேற்கொள்ள கீழ்க்கண்ட கிருமி நாசினி மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்ய தோராய செலவினம் ரூ.6,00,000/- பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு
<table>
<tr><th>வ.எண்</th><th>பொருட்கள் விபரம்</th><th>தேவைப்படும் அளவு</th></tr>
<tr><td>1.</td><td>சுண்ணாம்பு தூள்</td><td>5 மெட்ரிக் டன்</td></tr>
<tr><td>2.</td><td>பிளிச்சிங் பவுடர்</td><td>2 மெட்ரிக் டன்</td></tr>
<tr><td>3.</td><td>கருப்பு பெனாயில்</td><td>200 லிட்டர்</td></tr>
<tr><td>4.</td><td>வெள்ளை பெனாயில்</td><td>200 லிட்டர்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:-</u>
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்</li>
</ol>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>15</td>
<td>உளுந்தூர்பேட்டை நகராட்சி 12.5 சதுர கி.மீ. பரப்பளவு கொண்டதாகும். 2011-ன்படி மக்கள் தொகை 23734 தற்போதைய மக்கள் தொகை 26720 ஆகும். மேலும் இந்நகராட்சியில் 18 வார்டிலிருந்து 24 வார்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.</td>
<td>91</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| | இந்நிலையில் கீழ்க்கண்ட பணியிடங்களுக்கு நிரந்தர பணியிடங்கள் இல்லாத காரணத்தினால் அப்பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சி ஆட்சியரின் Ref.No.12/3737/2020 Dated: 31.05.2022ன்படி நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதத்தின்படி வருவாய் நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு<br><br>1. தட்டச்சர் 1<br>2. கணினி இயக்குபவர் 1<br>3. பாதாள சாக்கடை திட்டப்பணி உதவியாளர் 2<br>4. ஆணையர் வாகன ஓட்டுநர் 1<br>5. நகராட்சி பொறியாளர் வாகனம் ஓட்டுநர் 1<br>6. நகரமன்ற தலைவர் வாகனம் ஓட்டுநர் 1<br>7. குடிநீர் விநியோக உதவியாளர் 8<br>**மொத்தம் 15**<br><br>**அலுவலக குறிப்பு –**<br><br>மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 16 | இந்நகராட்சிக்குட்பட்ட எல்லை பகுதிகளில் சுமார் 67.105 கி.மீ. சாலைகளும், இதன் ஒருபுறத்தில் கால்வாய் மற்றும் 2 குடிநீர் திட்டங்களில் 21 கி.மீ குழாய்களும் உள்ளன. இவற்றில் சாலை ஓரங்களில் அதிக மண் திட்டுக்கள் உள்ளன. இவற்றால் சாலை போக்குவரத்து | 92 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| | பாதிக்கப்படுவதாக மாவட்ட நிர்வாகம் Road Safety Meeting-ல் அறிவுறுத்தப்பட்டும், உள்ளூர் பொதுமக்களாலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. எனவே , சாலை ஓரங்களில் உள்ள மண் திட்டுக்கள் மற்றும் C&D Waste களை அப்புறப்படுத்தவும் தேவைப்படும் பொழுது கால்வாய் மண் அகற்றவும் குழாய்களின் உடைப்புகள் சரிசெய்யவும் பணிகளுக்கு 3D Excavator (JCB) இயந்திர வாடகை அடிப்படையில் அமர்த்தி கொள்ளவும், இதற்கான தோராய செலவினம் ரூ.5,00,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 17 | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்பட்ட உளுந்தாண்டார்கோயில் மாஷபுரிஷ்வரர் ஆலயத்தில் தேர் திருவிழாவை முன்னிட்டு சாலை ஓரங்களில் உள்ள மண் திட்டுக்கள் மற்றும் C&D Waste களை அப்புறப்படுத்தவும் தேவைப்படும் பொழுது கால்வாய் மண் அகற்றவும் குழாய்களின் உடைப்புகள் சரிசெய்யவும் பணிகளுக்கு 3D Excavator (JCB) இயந்திர வாடகை அடிப்படையில் அமர்த்தி கொள்ளவும், இதற்கான தோராய செலவினம் ரூ.50,000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | 93 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 18 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் சுமார் 2507 எண்ணிகை தெருமின் விளக்குகள் பயன்பாட்டில் உள்ளன. ஏற்கனவே 1142 LED Conversion ஆக மாற்றப்பட APEX என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. ஆனால் இதுநாள் வரையில் பணிகள் | 94 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CamScanner

| | | | |
|---|---|---|---|
| | துவங்கப்படவில்லை. இந்நிலையில் 24.03.203 அன்று மழை இடியின் காரணமாக 450 தெருமின் விளக்குகள் சேதமடைந்துவிட்டது. APEX என்ற நிறுவனம் பணிதுவங்க வருவதற்கு முன்பு புதிய LED 450 தெருமின்விளக்கு மாற்றியமைக்க தோரோய செலவினம் ரூ. 3,0,000/-மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. உளுந்தூர்பேட்டை நகராட்சியின் பொது மக்கள் நலன் கருதி தெருமின் விளக்குகள் மற்றும் உதிரிபாகங்கள் வாங்கவும், இதற்கான செலவினத்தை இந்நகராட்சியின் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது. | | |
| 19 | கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சியில் 12.5 ச.மீ. பரப்பளவில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும், நகரில் 113 எண்கள் உள்ளது, இதில் 67 மட்டும் செயல்பாட்டில் உள்ளது. எனவே 67 எண்ணிக்கை (Mini Power Pump) பவர் பம்ப் மூலமாக பொது மக்களுக்கு தண்ணீர் தேவைகளை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்காக உள்ளது. இவற்றில் சில இடங்களில் உள்ள Mini Power Pump borewell- ல் மோட்டார்கள் பொறுத்தவும், பழுதடையும் மோட்டார்களை Coil சரி செய்து இயக்கவும், ஆதாரக் குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகளை சரிசெய்யவும் தோராய செலவினம் ரூ. 9,90,000/- க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | 95 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 20 | உளுந்தூர்பேட்டை நகராட்சிக்குட்ட வார்டு எண்.19-ல் பெரியார் தெரு (கந்தசாமிபுரம் மேற்கு) வடிநீர் வாய்க்கால் சீரமைக்கும் பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.9,50,000/-க்கு பணி | 96 | மன்றம் |

CamScanner

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு -**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | | அனுமதிக்கப்பட்டது |
| 21 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022-2023 -ன் கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 12.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. | 97 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண். 16, விகேஎஸ் நகர் மயானத்தில் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி | 11.00 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை<br>M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை |
| 2 | வார்டு எண். 16, ஸ்ரீராம் நகர் விரிவாக்க மயானத்தில் | 11.00 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி |

CS CamScanner

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>சுற்றுச்சுவர் அமைக்கும் பணி</td><td></td><td>உளுந்தூர்பேட்டை<br>M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம்</td><td>வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை</td></tr>
</table>
அலுவலக குறிப்பு –
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. S.P.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை என்பவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>22</td>
<td>ஏலம் விவரம் கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.<br>
<u>i) முதல் ஏலம் நடைபெற்ற தேதி: 14.10.2022</u>
<table>
<tr><th>வ. எண்</th><th>குத்தகை இன விபரம்</th><th>ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம்</th><th><u>சர்கார் மதிப்பு</u> ரூ</th><th>ஏலம் கோரிய விவரம்</th></tr>
<tr><td>1</td><td>காய்கறி வார சந்தை குத்தகை:</td><td>4</td><td>28,94,178/-</td><td>ஏலம் கோர யாரும் முன் வரவில்லை</td></tr>
</table>
</td>
<td>98</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 4 | 13,34,732/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

**ii) 2வது ஏலம் நடைபெற்ற தேதி:11.11.2022**

| வ. எண் | குத்தகை இன விபரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் | சர்கார் மதிப்பு ரூ. | ஏலம் கோரிய விவரம் |
|---|---|---|---|---|
| 1 | *காய்கறி வார சந்தை குத்தகை:* | 6 | 28,94,178/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |
| 2 | பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்க கட்டணம் வசூலிக் உரிமம் | 4 | 13,34,732/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

**iii) 3வது ஏலம் நடைபெற்ற தேதி:25.11.2022**

| வ. எண் | குத்தகை இன விபரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் | சர்கார் மதிப்பு ரூ. | ஏலம் கோரிய விவரம் |
|---|---|---|---|---|

CamScanner

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | *காய்கறி வார சந்தை குத்தகை:* | 6 | 28,94,178/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |
| 2 | பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்க கட்டணம் வசூலிக்கு உரிமம் | 4 | 13,34,732/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

**iii) 4வது ஏலம் நடைபெற்ற தேதி:09.12.2022**

| வ. எண் | குத்தகை இன விபரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் | சர்கார் மதிப்பு ரூ. | ஏலம் கோரிய விவரம் |
|---|---|---|---|---|
| 1 | *காய்கறி வார சந்தை குத்தகை:* | 7 | 28,94,178/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |
| 2 | பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்க கட்டணம் வசூலிக்கு உரிமம் | 8 | 13,34,732/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

**iii) 5வது ஏலம் நடைபெற்ற தேதி:06.01.2023**

| வ. எண் | குத்தகை இன விபரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர்க | சர்கார் மதிப்பு ரூ. | ஏலம் கோரிய விவரம் |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| | | ள் விவரம் | | |
| 1 | *காய்கறி வார சந்தை குத்தகை:* | 7 | 28,94,178/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |
| 2 | பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 8 | 13,34,732/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

**<u>iii) 6வது ஏலம் நடைபெற்ற தேதி:09.03.2023</u>**

| வ. எண் | குத்தகை இன விபரம் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விவரம் | <u>சர்கார் மதிப்பு</u> ரூ. | ஏலம் கோரிய விவரம் |
|---|---|---|---|---|
| 1 | *காய்கறி வார சந்தை குத்தகை:* | 8 | 28,94,178/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |
| 2 | பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 8 | 13,34,732/- | ஏலம் கோர யாரும் முன் வரவில்லை |

மேற்கண்ட தேதிகளில் நடைபெற்ற ஏலத்தில் கலந்து கொண்ட நபர்கள் சர்க்கார் மதிப்பை விட அதிக தொகைக்கு ஏலம் கோர முன்வரவில்லை. மேலும் ஏலத்தில் கலந்துகொண்டவர்கள் காய்கறி சந்தைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அரசாங்க மதிப்பு அதிகமாக உள்ளதாலும், சந்தையை ஒட்டியுள்ள ஜீப்ளி தெரு சிமெண்ட் ரோட்டில் ஏற்கனவே நடைபெற்று வந்த சந்தை தற்போது தெரு மக்களின்

CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| | எதிர்பினாலும், சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதாலும், தெருவோர கடைகள் தற்சமயம் நடமாடும் கடைகளால் சந்தைக்கு அதிக அளவில் கடைகள் சரிவர கூடவில்லை எனவும், சர்க்கார் ஏல மதிப்பு அதிகமாக உள்ளதை குறைத்து நிர்ணயிக்குமாறு கோரியுள்ளனர்.<br>2. மேலும், வரிசை எண். 2ல் உள்ள குத்தகை இனத்திற்கு உளுந்தூர்பேட்டை பேருந்து நிலையத்திற்குள் பேருந்துகள் அதிகமாக வராமல் தேசிய நெடுஞ்சாலை வழியாக செல்கிறது. மேலும் இப்பேருந்து நிலையம் "C" வகையை சார்ந்தது. ஆனால் சர்க்கார் ஏல மதிப்பு அதிகமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சர்க்கார் ஏல மதிப்பு அதிகமாக உள்ளதை குறைத்து நிர்ணயிக்குமாறு கோரியுள்ளனர். மேற்கண்ட சூழ்நிலையில் வாரகாய்கறி சந்தை குத்தகை இனத்திற்கு சர்க்கார் மதிப்பு ரூ.28,94,178/- -ல் 10 சதவீதம் ரூ.2,89,417/- கழித்து ரூ.2604760/- ஐ சர்க்கார் மதிப்பாக நிர்ணயம் செய்தும் மற்றும் பேருந்து தினசரி சுங்கம் குத்தகை இனத்திற்கு சர்க்கார் மதிப்பு ரூ-13,34,732/- -ல் 10 சதவீதம் ரூ.1,33,473/- கழித்து ரூ.12,01,258/- ஐ சர்க்கார் மதிப்பாக நிர்ணயம் செய்தும் பொது ஏலம் நடத்திட மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகராட்சியின் நிர்வாக நலன் கருதி சர்க்கார் மதிப்பை விட 10 சதவீதம் குறைத்து பொது ஏலம் நடத்திட மன்றம் அனுமதிக்கலாம். | | |
| 23 | உளுந்தூர்பேட்டை நகராட்சி அனைத்து சாலைகளை சீரமைக்கும் பணிகளை KNMT 2023-2024-ம் ஆண்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கு<br>**அலுவலக குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம். | 99 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 24 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் நகர மன்ற தலைவருக்கு தனி அறை, நகர மன்ற கூட்ட அரங்கம் மற்றும் போதிய மின் விளக்குகள் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்திட ஏதுவாக அலுவலக கட்டிடம் இயங்கும் வணிக வளாக கட்டிடத்தில் தரைதளத்தில் ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிட்டடத்தினை மேம்பாடு பணிகள் மேற்கொள்ளவும் மன்ற கூட்ட அரங்கம் அமைத்திடவும் தோராய செலவினம் ரூ.9,00,000 /-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | 100 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 25 | உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வீடுகளில் உருவாகும் மறுபயன்பாடு மறுசுழற்சி பொருட்களை (புத்தகம், துணிகள்,பொம்மைகள், பாட்டில்கள்,காலணிகள் ) ஆகிய பொருட்களை 24 வார்டுகளிலும் சேகரிக்கும் பொருட்டு அனைத்து வாடுகளிலும் குப்பை தொட்டிகள் அமைத்திட தோராய செலவினம் ரூ.100000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>மேற்காணும் SBM 2.0 திட்டத்தின் கீழ் IEC செயல்பாடுகளுக்கென ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | 101 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 26 | உளுந்தூர்பேட்டை நகராட்சியில் பொது நிதி 2022-2023 -ன் கீழ் கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 12.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற | 102 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | உளுந்தூர்பேட்டைநகராட்சி அலுவலகத்தில் உள்ள எலக்ட்ரிக் ஒயரிங் Three phase ஆக மாற்றி அமை | 1.00 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை<br>M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை |
| 2 | கெடிலம் மட்டிகை ஆரியநத்தம் பகுதிகளில் இருந்து வரும் மெயின் பைப் லைனில் ஏற்படும் பைப் லைன் உடைப்புகளை பழுதுகளை பழுது நீக்கம் | 9.00 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை<br>M/s. அருள் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம் | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை |
| 3 | பழைய நீதிமன்ற குடியிருப்பிலிருந்து பழைய பேரூராட்சி அலுவலகம் வரையில் நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் பைப்லைன் 10" inches | 4.30 | M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை<br>M/s. அருள் | (-)0.01% குறைந்த விலைப்புள்ளி வழங்கியவர் M/s. S.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், |

CamScanner

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>பைப்லைனை மாற்றி அமைக்கும் பணி</td><td></td><td>கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், சிறுபாக்கம்</td><td>உளுந்தூர்பேட்டை</td></tr>
</table>
அலுவலக குறிப்பு –
<ol>
<li>மன்றம் அனுமதிக்கலாம்.</li>
<li>மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த M/s. S.P.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், உளுந்தூர்பேட்டை என்பவர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.</li>
</ol>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>27</td>
<td>
உளுந்தூர்பேட்டை நகராட்சியில் உள்ள கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள் பழுது ஏற்படாமலும், நிர்வாக பணிகள் தாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு ஆண்டு பராமரிப்பு பணி (AMC -6-2023 முதல் 31-5-2024 வரை பணி மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ. 245000/- GST உள்பட (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பத்தி ஐந்தாயிரம் மட்டும்) ஆகும். மேற்கண்ட செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.
ஆண்டு பராமரிப்பு பணி (AMC)யின் கீழ் வரும் கணினி மற்றும் கணினி சார்ந்த சாதனங்கள்
<table>
<tr><td>1</td><td>கணினி (Computer)</td><td>7 Nos</td></tr>
<tr><td>2</td><td>HP Laser Printer</td><td>9 Nos</td></tr>
<tr><td>3</td><td>TVS Printer</td><td>2 Nos</td></tr>
</table>
</td>
<td>103</td>
<td>மன்றம் அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 4 Laptop 1 Nos<br>5 Switch 5 Nos<br>6 Wifi remote 2 Nos<br>7 Network and Networking panel 3 Nos<br>8 Epson Printer 2 Nos<br>9 Inverter 1 Nos<br>மேற்கண்ட 32 சாதனங்களும் சேர்த்து Network-ல் வரும் cat-6 cable, RJ 45 மற்றும் Trimming சேர்த்து பராமரிக்கப்பட வேண்டியது.<br>**அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>இதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 28 | உளுந்தூர்பேட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.13-ல் கந்தசாமி தெரு சர்வே எண். 641/6 ல் 0.77 சதுர மீட்டர் மற்றும் 641/7A1ல் 0.85 சதுர மீட்டர் மொத்தம் 182 சதுர மீட்டர் பரப்பிற்கு இருசக்கர வாகனம் (MC Stand ) அமைத்திடவும், அதற்கான உரிய கட்டணங்கள் வசூலித்துக் கொண்டு உரிய அனுமதி வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம் | 104 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| 29 | உளுந்தூர்பேட்டை சிறப்பு நிலை பேரூராட்சியில் (தற்போது நகராட்சி) துப்புரவு பணியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. ந. இருதயநாதன் என்பவர் தமக்கு கள்ளக்குறிச்சி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணை ந.க.எண்.1907/97/அ3 நாள்.05.05.1998-ன்படி உழுவை ஒட்டுநராக பதவி உயர்வு வழங்கப்பட்டு ஊதிய விதிகம் 3200-85-4900 என்ற ஊதியத்தில் தொடர்ந்து பணிமாற்றி வந்த நிலையில் மாவட்ட ஆட்சியர் விழுப்பரம் அவர்களின் உத்தரவு ந.க.எண்.3893/2003 நாள்.02.12.2003-ன்படி கள்ளக்குறிச்சி பேரூராட்சியில் இருந்து உளுந்தூர்பேட்டை பேரூராட்சியில் காலியாக இருந்த உழுவை ஒட்டுநர் பணியிடத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு உழுவை ஒட்டுனராக பணியாற்றி வந்த நிலையில் தனியருக்கு ஒட்டுநருக்குண்டான கல்வி தகுதி (எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை) இல்லாத நிலையில் அவருக்கு உழுவை ஒட்டுநராக பதவி உயர்வு அளித்தன் மீது அவரின் பின்னேற்பு பெற வேண்டி பேரூராட்சி செயல் அலுவலரால் கருத்துரு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் இருந்த நிலையில் உளுந்தூர்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறை உத்திரவின்படி 29.02.2020 அன்று துப்புரவு பணியாளராக ஓய்வு பெற அனுமதித்து உத்தரவிடப்பட்டதை. எதிர்த்து தமக்கு ஓட்டுநருக்குண்டான ஊதிய நிலுவையை வழங்குமாறும் ஒட்டுநருக்கான ஊதிய விகிதத்தில் ஓய்வூதியம் வழங்குமாறும் கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.5674/2020 ஆக வழக்கு தொடர்ந்தார். அரசு கூடுதல் தலைமை செயலாளர் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் கடிதம் மற்றும் நகராட்சி நிர்வாகம் இயகுநர் சென்னை அவர்களின் கடிதத்தில் தனியரின் 01.03.2023 நாளிட்ட மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை அனுப்புமாறு கோரியுள்ளதன் அடிப்படையிலும் சென்னை உயர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண். C.P.No. 655/2022 நாள். 18.08.2022- ல் உத்தரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் 28.02.2018 முதல் 29.02.2020 வரையில் பணியாற்றிய காலத்திற்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய வேறுபாடு நிலுவைத் தொகை ரூ.264765/-ஐ வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | 105 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு –**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் தொகையை வருவாய் நிதியிலிருந்து வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | | |
| 30 | உளுந்தூர்பேட்டை நகராட்சி பகுதியில் சென்னை மெயின் ரோட்டில் அமைந்துள்ள ஆதிலட்சுமி திருமண மண்டபம் சொத்துவரி தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் திரு.ராமலிங்கம் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P. No. 18551/2020 தீர்ப்புரை நாள். 26.11.2021-ம் நாளில் வெளியிடப்பட்ட தீர்ப்புரையின்படி மறு அளவீடு (Determine) செய்து வரி விதிப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டதில் மறு அளவீடு செய்யப்பட்டுள்ளது. பழைய கேட்பு தொகை ரூ.27,60,264/- திருத்தம் செய்யப்பட்ட தொகை ரூ.1942158/- கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.818106/- ஐ நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு**<br>மன்றம் அனுமதிக்கலாம். | 106 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 31 | உளுந்தூர்பேட்டை நகராட்சி அலுவலகத்தில் உள்ள அனைத்து கணினி பிரிண்டர்களுக்கு டோணர் மை புதுப்பிக்க ஒரு ஆண்டிற்கு தோராய செலவினம் ரூ.100000/- மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | 107 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| 32 | உளுந்தூர்பேட்டை நகராட்சி ஆணையருக்கு பயன்படுத்தப்படும் வாகன எண்.TN15D 1883 நகராட்சி பொறியாளர் வாகன எண்.TN154858 மற்றும் பொதுசுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும் பொதுசுகாதார வாகனங்கள் பொதுசுகாதார பணிக்கு பயன்படுத்தப்படும் பொதுசுகாதார வாகனங்கள் TN32 8364, (டிராக்டர்) TN15 7902 (மினிலாரி), TN 15 8303 (மினிலாரி), TN15C – 4359 (டாட்டா ஏஸ்) TN15 –3804 (டாட்டா ஏஸ்) அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை பழுதுநீக்கம் செய்திட தோராய செலவினம் ரூ.300000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு -**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | 108 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 33 | உளுந்தூர்பேட்டை சிறப்புநிலை பேரூராட்சியாக செயல்பட்ட போது பணியில் சேர்ந்து தற்போது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில் இந்நகராட்சியில் மேல்நிலை குடிநீர் தொட்டி காவலர் திரு. இல, பரந்தாமன் என்பவர் திருச்சி மாநகராட்சிக்கு செல்ல விருப்பம் தெரிவித்து மனு அளித்துள்ளார். இவரின் விண்ணப்பம் நகராட்சிகள் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்கு அனுப்பிட மன்றத்தின் அனுமதிக்கு<br>**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம் | 109 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 34 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதத்தில், உளுந்தூர்பேட்டை நகராட்சிக்கு ஸ்கார்ப்பியோ ஈப்பு வாகனம் கொள்முதல் செய்திட ரூ. 16,82,000/-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனை தொடர்ந்து அம்மதிப்பீட்டில் ஸ்கார்ப்பியோ வாகனம் ஜெம் போர்டலில் | 110 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| | கிடைக்கப்பெறாத காரணத்தினால், தொடர்ந்து டிசம்பர் 2022 முதல் மே 2023 வரை ஜெம் போர்டலில் Available இல்லை என்பதாலும் தற்போது நகராட்சியில் புதியதாக நகராட்சி பொறியாளர் பணியில் சேர உள்ள நிலையில் புதியதாக ஸ்கார்ப்பியோ ஈப்பு வாகனம் தற்போது ஜெம் போர்டலில் Available உள்ள மகேந்திரா ஸ்கார்ப்பியோ மாடல் Z8 L D AT 4WD 7STR ரூ. 21,56,659/- தொகையுடைய வாகனத்தினை நகராட்சியின் அவசர அவசியம் கருதி கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு -**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 35 | இந்நகராட்சியில் செயல்படுத்தப்படவுள்ள மாண்புமிகு முதல்வர் அவர்களின் காலை சிற்றூண்டி உணவு திட்டத்திற்கு மாணவ மாணவிகளுக்கு உணவு பரிமாறும் பணிக்கு ஒரு பள்ளிக்கு ஒரு நபர்வீதம் மூன்று பள்ளிக்கு நான்கு நபர்களை நியமித்து நபர் ஒருவருக்கு மாதம் ரூ.1500/-வீதம் ஒரு மாதத்திற்கு மொத்தம் ரூ6000/- வழங்கவும் மற்றும் சமையல் செய்ய பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு வாங்க ஆகும் செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு -**<br><br>1. மன்றம் அனுமதிக்கலாம். | 111 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

CS CamScanner

| | | | |
|---|---|---|---|
| | 2. மேற்காணும் செலவித்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம் | | |
| 36 | உளுந்தூர்பேட்டை நகராட்சி 11 வது வார்டு உறுப்பினர் திருமதி. ந. வாசுகி அவர்களின் கணவர் திரு. நடராஜன் என்பவர் 21.05.2023 அன்று இயற்கை எய்தினார் அன்னாருக்கு நகர மன்றம் அஞ்சலி செலுத்துகிறது | 112 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |
| 37 | உளுந்தூர்பேட்டை நகராட்சியின் 2022-2023-ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கையினை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு** :- மன்றம் பதிவு செய்யலாம் | 113 | மன்றம் அனுமதிக்கப்பட்டது |

29/05/2023

நகர மன்ற தலைவர்

உளுந்தூர்பேட்டை நகராட்சி